தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

ஊடக செய்தி 11/2019 நாள் : 16.06.2019

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின்

பொதுச் செயலாளர் மு.அன்பரசு வெளியிடும்

## ஊடகச் செய்தி

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில செயற்குழு கூட்டம் சென்னையில் 16.6.2019 அன்று மாநில துணைத் தலைவர் ஆ. செல்வம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாநில செயற்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ஒருங்கிணைந்த நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு திட்டம் (IFHRMS) சுமார் 300 கோடி செலவில் WIPRO நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. WIPRO நிறுவனமானது கொடுத்த பணிகளை முடிக்க முடியாமல் திணறுகிறது. இந்நிலையில் பலவித குளறுபடிகளுடன் உள்ள ஒரு மென்பொருளை வைத்துக்கொண்டு அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பலவித சந்தேகங்களுக்கு உடனடி விளக்கம் கிடைக்கப்பெறாத நிலையில் சம்பளப் பட்டியலை கருவூலத்தில் சமர்ப்பிக்க வேண்டாம் அப்படி தராவிட்டால் சம்பளம் கிடைக்காது என்ற தொனியில் மிரட்டும் போக்கினை தமிழக அரசு உடனடியாக கைவிட வலியுறுத்தி

25.6.2019 அனைத்து மாவட்ட கருவூலங்கள் மற்றும் சம்பளம் வழங்கும் அலுவலர்கள் முன்பு பல்லாயிரக்கணக்கான ஊழியர்களை திரட்டி முன்பு ஆர்ப்பாட்டம் நடத்திட வேண்டும்.

2 தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் மீதான அரசின் பழி தீர்க்கும் வன்மத்துடன் கூடிய ஓய்வு பெறும் நாளில் வழங்கப்பட்ட தற்காலிகப் பணி நீக்கத்தினை ரத்து செய்திட தமிழக அரசை வலியுறுத்தி 28.6.19 அன்று மாவட்டத் தலைநகரங்களில் ல்லாயிரக்கணக்கான ஊழியர்களை திரட்டி மாலை நேர தர்ணா போராட்டத்தை நடத்திட வேண்டும்.

3 கரூர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் திருமதி ரோசி வெண்ணிலா என்பவர் கடந்த ஜுன் 2018ல் பொறுப்பேற்றதிலிருந்து கல்லூரியில் பணிபுரியும் ஊழியர்களையும், செவிலியர்கள் உள்ளிட்ட இதர ஊழியர்களையும் மரியாதைக் குறைவாகவும், ஒருமையில் பேசுவதும், எதேச்சதிகாரத் தன்மையுடன் ஊழியர்களின் பணப்பயன்களை நிறுத்தி வைப்பது

போன்ற அராஜகப்போக்கினைமேற்கொண்டு வருகிறார். இவரது ஊழியர் விரோத போக்கு அரசு செவிலியர்கள் மீது தொடர்ந்தததால் கடந்த 5.6.19 அன்று செவிலியர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களும் அமைதியான முறையில் உள்ளிருப்பு போராட்டத்தை நடத்தினர். கரூர் வருவாய் கோட்டாட்டாசியர், காவல் துணை கண்காணிப்பாளர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் ஒரு மாத காலத்திற்குள் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதாக கரூர் கோட்டாட்சியர் உத்தரவாதம் அளித்ததை தொடர்ந்து போராட்டம் விலக்கிக்கொள்ளப்பட்டது. இப்பேச்சுவார்த்தையில் தமிழ்நாடு அரசுஊழியர் சங்க மாநில துணைத் தலைவரும், தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்க மாநிலத் தலைவருமான தோழர் மு. சுப்பிரமணியன் தமிழ்நாடு அரசு நர்சுகள் சங்க மாநில துணைத் தலைவர் திருமதி மு. நல்லம்மா, மாவட்டத் தலைவர் திரு. கார்த்திக், மாவட்டச்செயலாளர் திருமதி செல்வராணி, மாவட்டப் பொருளாளர் திருமதி தனலட்சுமி ஆகிய ஐந்து பேரையும் 11.6.19 அன்று தற்காலிக பணி நீக்கம் செய்து மருத்துவக் கல்லூரி முதல்வரால் உத்தரவு வழங்கப்பட்டது. இது இவரது அதிகார வரம்புக்கு மீறிய செயலாகும்.

கரூர் மருத்துவக் கல்லூரி முதல்வர் திருமதி ரோசி வெண்ணிலாவின் ஊழியர் விரோதப் போக்கை கண்டித்தும் பணி நீக்கத்தை ரத்து செய்ய வலியுறுத்தியும் 5.7.2019 அன்று மாநிலம் தழுவிய அளவில் கரூர் மாவட்ட ஆட்சியரிடம் பெருந்திரள் முறையீடு நடத்திட வேண்டும்.

4. திருவாரூர் மாவட்டத்தில் சுகாதாரப் பணிகள் துணை இயக்குநராகப் பணியாற்றி வரும் திரு. ஸ்டேன்லி மைக்கேல் என்பவர் தான் நேர்மையான அதிகாரி என்று கூறிக்கொண்டு தொடர் ஊழியர் விரோத, சங்க விரோத நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அரசு ஊழியர் சங்கத்தின் திருவாரூர் மாவட்டத் தலைவரான தோழர் ஜி. பைரவநாதன் மற்றும் தமிழநாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்க மாநில, மாவட்ட நிர்வாகிகள் மற்றும் செவிலியர்கள் மீதும் ஆய்வு - தணிக்கை என்ற பெயரில் அச்சுறுத்தும் போக்கை கையாண்டு வருகிறார்.

கரூர் அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் திருமதி ரோசி வெண்ணிலா என்பவரின் ஊழியர் விரோத நடவடிக்கைகளை கண்டித்து அம்மாவட்டத்தில் 11.6.19 முதல் நடைபெற்ற உள்ளிருப்பு போராட்டத்தில் கலந்து கொண்டதற்காக தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்க பொதுச் செயலாளர் தோழர் உ. சண்முகம் என்பவரை போராட்டத்தில் கலந்துகொண்டார்

என்ற ஒரே காரணத்திற்காக அவர் பணியாற்றும் குளிக்கரை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 15.6.19 அன்று மீளப் பணியில் சேர்க்கக்கூடாது என வாய்மொழி உத்தரவாக தெரிவித்து தமது அராஜகத்தை மீண்டும் அரங்கேற்றியுள்ளார். இவரது ஊழியர் விரோத போக்கு என்பது தொடர்கதையாக உள்ளதை கண்டித்தும் அவரது நடவடிக்கைகளை மாற்றிக்கொள்ளக் கோரியும் 27.6.19 அன்று மாநிலம் தழுவிய அளவில் திருவாரூர் துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டமும் திருவாரூர் மாவட்ட ஆட்சியரிடம் பெருந்திரள் முறையீடும் நடத்தப்பட வேண்டும்.

**5. 13வது மாநில மாநாடு**

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் அமைப்பு விதிகளின்படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாநாடுகள் நடத்திட வேண்டும். அதன்படி வட்ட மாநாடுகள் ஜுன், ஜுலை மாதங்களிலும், மாவட்ட மாநாடுகள் ஆகஸ்ட் மாதத்திலும் இறுதியாக 13வது மாநில மாநாடு செப்டம்பர் 27,28.29 தேதிகளில் தஞ்சாவூரில் சிறப்பாக நடத்தப்பட வேண்டும்.

**(மு. அன்பரசு)**
பொதுச்செயலாளர்